Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள் 04 • விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM [Peoples Daily] மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 27 ஆம் உ புதன்கிழமை (11 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஃ 17 ஓசை 143

## யாழ். மாவட்டத்தில் மூன்று லட்சம் அகதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட புள்ளி விபரங்களின்படி இம் மாவட்டத்தில் அகதிகள் தொகை தற்போது 2,91000 ஆக அதிகரித்துள்ளது. 331 முகாம்களில் தங்கியுள்ள 58,367 குடும்பங்களைச் சேர்ந்த மேற்படி அகதிகளின் சுகாதார மற்றும் நிவாரணவசதிகளை அரச உத்தியோகத்தர்கள் கவனித்து வருவதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார். இவர்களுக்கான முதலாவது வார உலர் உணவுப் பொருள் விநியோகம் பூர்த்தியடைந்துள்ளதென்றும் அவர் கூறினார்.

## "யாழ். மண்ணையும், மக்களையும் காப்பவர்வேறுமாவட்ட இளைஞரே"

### - போர்க்காலக் கூட்டத்தில் யோகி

(யாழ்ப்பாணம்)

இப்பொழுது கோட்டை முகாமிலும் சரி பலாலி முகாமிலும் சரி இந்த யாழ்ப்பாண மண்ணையும், மக்களையும் பாதுகாக்க போராடி வருபவர்கள் ஏனைய மாவட்டத்து இளைஞர்களே. இதுவரை யாழ். குடாநாட்டில் வீரமரணமடைந்த போராளிகளில் அரைவாசிக்கு மேற்பட்டோர் வெளிமாவட்டத்து இளைஞர்களே இத்துர்ப்பாக்கிய நிலை மேலும் தொடராது ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற வழியில் இப்போராட்டத்துக்கு உதவ வேண்டுமென்று நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் போர்க்காலக் கூட்டத்தில் பேசிய விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணி பொதுச் செயலாளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய திரு.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'இன அழிப்பிற்கு எதிராக அனைத்து தமிழரும் போராடியே தீரவேண்டும்'

### பல்கலைக்கழகத்தில் மகேந்திரராசா

(யாழ்ப்பாணம்)

''பூமியில்உயிரினம்தோன்றியதிலிருந்து அவற்றிற்கிடையே போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு உயிரினமும் தனக்காக போராடியே தீரவேண்டும் அந்த வகையில் தமிழினமானது தன்னையும் ஒரு போராட்டச் சூழலில் இணைத்துக் கொண்டுள்ளது இதுஒரு உலகப் பொதுநியதி என நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கானபோர்க்காலப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில்

தமிழின அழிப்பானது 1948லிருந்து தொடர்கிறது தமிழினத்தின் ஒவ்வொரு அங்கமாகியநாம் ஒவ்வொருவரும் இவ்வின அழிப்பிற்கெதிராக போராடியே தீரவேண்டும் என்று கூறினார்.

இவ்வின அழிப்பிற்கெதிரானபோரில் தற்போதைய பல்கலைக்கழக மாணவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபை: விடுதலைப் புலிகள் நிராகரிப்பு

# ஒற்றையாட்சி; இனப்பிரச்சினை தீராது!

## இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு 1 கோடி ரூபா ஒதுக்கீடு

இராமேஸ்வரம் வந்தடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிக்கவென்று தமிழக அரசினால் ஒருகோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென மாநில அரச உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மாத்திரம் 90 படகுகளில் 3700 அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள். அண்மைக் கால இராணுவ நடவடிக்கையின் பின்பு இதுவரை மொத்தமாக 16 ஆயிரம் அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகவும் மாநில அரச அதிகாரி கூறியுள்ளார்.

## சார்க் நாடுகள் செல்லும் சர்வகட்சி பாராளுமன்றக் குழு

## பூரண மானில சுயாட்சி இல்லையானால் தமிழீழத் தனியரசுப் போர் தீவிரமாகும்

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"சிங்களப் பேரினவாத அரசு இன்று தமிழீழ மக்கள்மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தை ஏவிவிட்டு, இனப்படுகொலையை தீவிரமாக்கி வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொலையுண்டு வருகின்றனர். பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அல்லல் படுகின்றனர். ஒருபுறம் எமது மக்களை அழித்துக் கொண்டு, அவர்களைச் சொந்த மண்ணிலிருந்து விரட்டிக்கொண்டு, மறுபுறம் மாகாணசபை

## வற்றாப்பளையில் ஹெலி தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று குடிமக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் ஹெலியில் இருந்து துப்பாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீலங்கா அரசு

## இராணுவத்தால் முடியாததை உணவால் சாதிக்கப்பார்க்கிறது

### - சிவராஜலிங்கம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ பலத்

ஈடுபடவேண்டும்.

# இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு 1 கோடி ரூபா ஒதுக்கீடு

இராமேஸ்வரம் வந்தடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை பராமரிக்க வென்று தமிழக அரசினால் ஒருகோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளதென மாநில அரச உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று மாத்திரம் 90 படகுகளில் 3700 அகதிகள் இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளார்கள். அண்மைக் கால இராணுவ நடவடிக்கையின் பின்பு இதுவரை மொத்தமாக 16 ஆயிரம் அகதிகள் தமிழகம் வந்துள்ளதாகவும் மாநில அரச அதிகாரி கூறியுள்ளார்.

# சார்க் நாடுகள் செல்லும் சர்வகட்சி பாராளுமன்றக் குழு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளின் தற்போதையநிலைமைகள் குறித்து ''சார்க்'' அமைப்பு நாடுகளுக்கு விளக்குவதற்காக சபாநாயகர் எம். எச். மொகமட் தலைமையிலான சர்வகட்சிப் பாராளுமன்றக் குழுவொன்று அடுத்தவாரம் செல்லவுள்ளது.

முதற் கட்டமாக இந்தியாவுக்கு இம்மாதம் 17 ஆம்திகதி இக்குழு விஜயம் செய்யவுள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உணவு மருந்துப்பொருட்கள் கொண்டுவர 10 லொறிகள்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டில் இன்று மதவாச்சி செல்கின்றன

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஏற்பாட்டின் பேரில் தென்னிலங்கையிலிருந்து மருந்துப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் எடுத்து வருவதற்கென பத்து லொறிகள் இன்று காலை யாழ்ப்பாணத்திலிருந்து செல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பூரண மானில சுயாட்சி இல்லையானால் தமிழீழத் தனியரசுப் போர் தீவிரமாகும்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"சிங்களப் பேரினவாத அரசு இன்று தமிழீழ மக்கள்மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தை ஏவிவிட்டு, இனப்படுகொலையை தீவிரமாக்கி வருகிறது. சிங்கள ஆயுதப்படைகளின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொலையுண்டு வருகின்றனர். பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக அல்லல் படுகின்றனர். ஒருபுறம் எமது மக்களை அழித்துக் கொண்டு, அவர்களைச் சொந்த மண்ணிலிருந்து விரட்டிக்கொண்டு, மறுபுறம் மாகாணசபை என்றும் தேர்தல் என்றும் போலிநம்பிக்கையூட்டி சிங்கள அரசு எமது மக்களையும் உலகத்தையும் ஏமாற்ற முனைகிறது. இந்த அரசியல் சூழ்ச்சி வலையில் நாம் சிக்கிவிடத்தயாராக இல்லை. இன்றைய தமிழின அழிப்பு யுத்தத்தால் எழுந்துள்ள பூதாகரமான பிரச்சினைகளுக்கு மாகாணசபைத்திட்டம் ஒரு தீர்வாக அமையப்போவதில்லை. ஆகவே புதிய திருப்பமடைந்திருக்கும் இன்றைய வரலாற்றுச் சூழ்நிலையில் மாகாணசபை அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்றைய சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தலில் பங்கு பற்றவும் எமது மக்கள் தயாராக இல்லை''

இவ்வாறுவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அதிகாரபூர்வமான அறிக்கையில்குறிப்பிட்டுள்ளது இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

''மாகாண சபைத்திட்டம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே இத் திட்டத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் எதிர்த்து வந்தது என்பதை எமது மக்கள் அறிவார்கள். இந்தத் திட்டத்தில் எந்த வகையான உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் இல்லை என்பதால் நாம் அதனை அன்றே நிராகரித்துவிட்டோம். தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக மாகாணசபைத் திட்டம் அமையவில்லை என்பது தான் எமது நிலைப்பாடு. எனவேதான், முன்னைய இந்திய அரசு இத் திட்டத்தை ஆயுதமுனையில் எமது மக்கள் மீது திணிக்க முயன்றபோது நாம் அதனை எதிர்த்தோம் இறுதியில், மாகாண சபை அமைப்பில் இந்திய அரசும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அகதிகளுக்கு சோல்ட் உதவி

மாணவர் அமைப்பு (சோல்ட்) முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அகதிகளுக்கு ஒரு லொறி மூலம் நிவாரணப் பொருட்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வற்றாப்பளையில் ஹெலி தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று குடிமக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் ஹெலியில் இருந்து துப்பாக்

(4ஆம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா அரசு

# இராணுவத்தால் முடியாததை உணவால் சாதிக்கப்பார்க்கிறது

– சிவராஜலிங்கம்

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ பலத்தால் அடக்கிவிட முடியாது என்பதை நன்குணர்ந்து கொண்ட அரசாங்கம் பட்டினி போட்டுத் தமிழினத்தை அடக்க முற்பட்டுள்ளது: அதற்கு எதிராக நாம் உணவு உற்பத்திப் போராட்டத்தில் ஈடுபடவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான கடன் வசதியும் வருமானத்தை ஊக்குவிக்கும் திட்டங்களைப் பற்றிய ஆய்வுப் பட்டறையில் உரையாற்றிய கிளிநொச்சி அபிவி

(4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் ஜே. வி. பியினர் அல்ல

## சிங்கள இராணுவ அதிகாரிகள்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளும், ஜே. வி. பி. இயக்கமும் ஒன்றல்ல. விடுதலைப் புலிகள் ஆயுத ரீதியாக பயிற்சி பெற்றவர்கள் அவர்களுக்கு மக்களின் ஆதரவு உண்டு. ஆனால் ஜே. வி. பி அப்படியல்ல.

இவ்வாறு ஸ்ரீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் கூறியதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜே. வி. பி. போராளி ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பொலநறுவ; இராணுவம்மீதுதாக்கு; 4 இராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

பொலனறுவை மாவட்டத்தில் திருக்கோணமடு இராணுவ முகாமில் இருந்து சிங்கபுர முகாமிற்கு சென்ற ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலின் போது ஒரு ஜீப்பில் வந்த இராணுவத்தினர் நால்வர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொல்லப்பட்ட இராணுவத்தினரிடம் இருந்து ரி-56-2 ரக இரண்டு துப்பாக்கிகளும் ரி-81-1 ரக ஒரு துப்பாக்கியும் ஒன்பது ரவைக் கூடுகளும் (மகசீன்) விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

மோதலின் பின் இராணுவத்தினர் வந்த ஒரு ஜீப்பும் விடுதலைப் புலிகளால் தீ வைத்து கொழுத்தப்பட்டது.

# விமானத்திலிருந்து சூடு மூவர் ஸ்தலத்தில் மரணம்

(முல்லைத்தீவு)

வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் லொறி தாழப்பறந்த விமானத்தைக் கண்டு நிறுத்தப்பட்டது. சாரதியும் அதில் பிரயாணம் செய்த பயணிகளும் வாகனத்தைவிட்டு இறங்கிப் பாதையருகில் வரிசையாக நின்றனர். வரிசையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலை

(உரும்பிராய்)

விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் ஒரு தொகுதியினர் இன்று மாலை நான்கு மணியளவில் உரும்பிராய் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேச அலுவலகத்தில் வைத்து விடுவிக்கப்பட உள்ளனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கூட்டுறவுச் சங்கம் கொள்ளை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரில் நேற்று முன்தினம் இரவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பலசரக்குக் கடையொன்று கதவுடைத்து கொள்ளையடிக்கப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட கடையில் இருந்து ரூபா எழுபத்தையாயிரத்துக்கும் குறையாத பெறுமதிவாய்ந்த பொருட்கள் களவாடப்பட்டன. (58)

# 10 மீனவரை காணவில்லையாம்

(சென்னை)

தூத்துக்குடியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற பத்துப் பேரை காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த பத்து நாட்களாக இவர்கள் கரைக்குத் திரும்ப வில்லை.

# முருங்கன் பகுதியில் ஸ்ரீலங்கா படை வீடுகள், கடைகளுக்குத் தீ!

(மன்னார்)

முருங்கனில் உள்ள பிரதான கடைத்தெருவில் உள்ள முப்பது கடைகள் நே[illegible] முன் தினம் பகல் பதினொ[illegible] மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன.

இங்கிருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடையும் அவர்களால் கொள்ளையடிக் கப்பட்டது.

செம்மண்தீவில் மூன்றுகடைகளும், பதினொரு வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. இங்கு உள்ள அம்பாள் வீதியில் பதினேழு வீடுகளும் எரிக்கப்பட்டன.

பன்னிரண்டாம் கட்டையில் பத்மநாதனின் வீடு எரிக்கப் பட்டது. இந்த வீடுகள் எரிக் கப்பட முன்னர் கொள்ளையும் நடைபெற்றது.

சுண்டுக்குழி கிராமத்தில் பதினொரு வீடுகள் எரிக்கப் பட்டன. மிகுதி வீடுகளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டாவது ஈழ யுத்தம்!

''இரண்டாவது உலக யுத்தம்'' என்று பி. பி. ஸி. தமிழோசை நிகழ்ச்சியில் வர்ணிக்கப்பட்டதாக நேற்றைய 'ஈழநாதம்' பத்திரிகையின் தலைப்புச் செய்தியில் வெளியிடப்பட்டிருந்தது. இரண்டாவது உலக யுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் திடீரென மக்கள் காணாமல் போகின்றனர்

## சர்வதேசமன்னிப்புச்சபைகுற்றச்சாட்டு

(லண்டன்)

இலங்கையில் மனித உரிமைகள் மீறல் இடம்பெற்று வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயிரக்கணக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# "மண்ணைப் பாதுகாக்க எம்முடன் சேருங்கள்"

### அரசியல் பொறுப்பாளர் கைலாஸ்

(முல்லைத்தீவு)

போராட்டகாலத்தில் இதுவரை குறைந்தது முப்பதினாயிரம் மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இத் தொகையில் சுமார் பத்தாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் அடங்குவர். இளைஞர்களும், யுவதிகளும் பெருமளவில் எம்முடன் இணைந்து போராட்டத்தில் பங்களிப்பு வழங்கியிருந்தால் தமிழீழத்தை வென்றெடுப்பது காலதாமதமாகியிராது.

இவ்வாறு கடந்த சனியன்று புதுக்குடியிருப்பில் "ஓடுவோம் வாருங்கள்" என்ற நாடகம் மேடையேறிய நிகழ்ச்சியில் முல்லைத்தீவு மாவட்ட அரசியல்பொறுப்பாளர் கைலாஸ் உரையாற்றுகையில் கூறினார்.

கைலாஸ் தொடர்ந்து பேசுகையில், நாளாந்தம் அப்பாவிப் பொதுமக்கள் இறந்து கொண்டு இருக்கிறார்கள் என்றும், வயதைத் தடையாகக் கருதாமல் இனத்தையும், மண்ணையும் அழிவிலிருந்து பாதுகாக்க எமது படையில் வந்து சேருங்கள் என்றார்.

இன்றைய காலகட்ட நிகழ்வுகளைச் சித்தரிக்கும் இந்த நாடகம் அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக மேடையேற்றப்பட்டது. நாடகத்தைப் பார்க்க மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். (58)


## அறிவித்தல்

புதிய உயர் கல்லூரியின் சகல விரிவுரையாளர்களையும், ஆசிரியர்களையும், மாணவர்களையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 13-07-1990 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**புதிய உயர் கல்லூரி**
**(NEW COLLEGE OF HIGH STUDIES)**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**

(B-1239)



## இடம்மாற்றம்

**ராஜா ஸ்ரோர்**
36, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம் பாதுகாப்புக் கருதி கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது.

## ராஜா ஸ்ரோர்

(ஞான பாஸ்கரோதயா சங்கம் அண்மையில்)
தாரணி வீடியோ சென்ரர்,
கல்வியங்காடு.

வாடிக்கையாளர்களே: எம்மிடம் கடல் தொழிலுக்கான, எல்லாவித மீன்பிடி உபகரணங்கள் சகலதும் விற்பனைக்குண்டு.


## சாரணர்களுக்கு அழைப்பு

(கொழும்புத்துறை)

இன்றைய சூழ்நிலையில் வடக்குக் கிழக்குப்பகுதிகளில் ஸ்ரீலங்கா இனவாத அரசின் ஆயுதப்படைகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான போர் விமானங்களின் குண்டு வீச்சினாலும் ஹெலிகொப்டர் தாக்குதலினாலும் மற்றும் ஷெல் தாக்குதல்களினாலும் நாளுக்கு நாள் மக்கள் காயமடைந்து வருகின்றார்கள். இவர்களுக்கு உதவும் வகையில் சகல சாரணிய இயக்கத் தொண்டர்களையும் யாழ் மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர் திரு சு. ஏகாம்பரநாதன் அவர்களை நேரில் சந்திக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## ஷெல் தாக்கி சிறுமி காயம்

(வவுனியா)

சில தினங்களுக்கு முன்னர் வவுனியா இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று, மருக்காரம்பளை பகுதியில் விழுந்து வெடித்ததில் சிறுமி ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளானார்.

சிவலிங்கம் ரமணி என்ற பதினொரு வயது நிறைந்த சிறுமி யாழ். வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வவுனியா பகுதியில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. (தி)

## இடம்மாற்றம்

(கொழும்புத்துறை)

யாழ். பிரதமதபால் திணைக்கள கணக்காளர் அலுவலகம் மானிப்பாய்க்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வலுவலகம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகில் உள்ள றியல்ஸ் இன்ஸ்ரிரியூட்ரியூஷன் சென்ரர் கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகின்றது. (24)

## ஹெலி மூலம் படையினர் இறங்குவராம்

(கொழும்பு)

"யாழ். கோட்டை முகாமினுள் சில தினங்களுக்கு முன்னர் ஹெலிக்கொப்டர் மூலம்

## இத்தாலியா - 90

# மனத்தாங்கல்களுடன் முடிவடைந்த 14 வது உலகக் கிண்ணம்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள் முடிவடைந்துவிட்டன. 14 ஆவது முறையாக நடைபெற்ற இப்போட்டிகளில் மே. ஜேர்மனி சாம்பியனாகி உதைபந்தாட்ட முதன்மை நாடாக புகழடைந்துவிட்டது. ஒவ்வொரு ஆட்டமும், சுற்றுப் போட்டியும் சில சாதனைகளை, மாற்றங்களை ஏற்படுத்துவது வழக்கம். அந்த வகையில் மே. ஜேர்மனி உலகக் கிண்ணத்தை மூன்று முறை வென்ற நாடு என்ற வகையில் பிரேசில், இத்தாலி நாடுகளுடன் சாதனையில் இணைகிறது.

### மீண்டும் 1986

1986 ஆம் ஆண்டு மெக்சிக்கோ நாட்டில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கலந்து கொண்ட அதே நாடுகள் தான் 1990 இலும் கலந்து கொண்டன. அன்று 3 - 2 என்ற கோல் வித்தியாசத்தில் ஆர்ஜென்ரீனா வெற்றிவாகை சூடியது. ஆனால் இன்று, கிடைத்த ஒரேயொரு பெனால்டியை சரியாக அன்ட்ரீஸ் கிரேமே பயன்படுத்தியதால் ஒரேயொரு கோல், வித்தியாசத்தில் மே. ஜேர்மனி வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றுவிட்டது. இம்முறை இப்போட்டியில் யார் வென்றிருந்தாலும் மூன்று முறை கிண்ணத்தை வென்றவர்களாவார்கள். இதே வேளை லத்தீன் அமெரிக்க நாடொன்று இரண்டாவது முறையாக ஐரோப்பாவில்- பிரேசிலுக்கு அடுத்தபடியாக- வெற்றிபெறும் வாய்ப்பை ஆர்ஜென்ரீனா தவறவிட்டு விட்டது. இதே வேளை தொடர்ந்து மூன்றாவது முறையாக இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்ற நாடென்ற சாதனையை மே. ஜேர்மனி புரிந்துள்ளது. ஆர்ஜென்ரீனாவின் தலைவரும் உலகின் முதன்மை ஆட்டக்காரருமான டியாகோ அமென்டோ மரடோனா ஒரு கோல்கூடப் போட இயலாத

பட்டமையே இதுவாகும். இதனைத் தொடர்ந்துஇரண்டாமவராக டெசோட்டி வெளியேற்றப்பட்டார். இவை ஒரு சில அவதானிப்புகள் மட்டுமேயாகும்'

### பெனால்டி முறை- அதிருப்தி

உதைபந்தாட்ட விமர்சகர்களால் இம்முறை கசப்புடன் நோக்கப்பட்ட ஒரு விடயம் பெனால்டி முறையின் மூலம் ஒரு ஆட்டத்தின் முடிவை நிர்ணயிப்பதாகும். 2 ஆம் கட்டத்தில் றோமானியா பின்னர் கால் இறுதியாட்டத்தில் யூகோஸ்லாவியா அரை இறுதியாட்டங்களில் இரண்டிலும் இத்தாலி இங்கிலாந்து ஆகியன வெளியேற்றப்பட்ட விதம் விமர்சகர்கள், ரசிகர்கள் மத்தியில் பெரும் ஆதங்கத்தை எழுப்பியுள்ளது.

### நிர்மலன்

குழு முறையிலான ஆட்டமொன்றின் போக்கு இறுதியில் தனி நபர் ஆட்டம் போன்று முடிவடைவதையே பெனால்டி முறை காட்டுவதாகப் பலர் அங்கலாய்க்கிறார்கள். மேலும் இருபக்க கோல் காப்பு வீரர் மீதும் பெரும் சுமையொன்றைச் சுமத்தி ஆட்டத்தின் முடிவை அவர்கள் மீது திணிப்பது நியாயமானதா என்றொரு வினாவையும் எழுப்புகிறார்கள். இதுபற்றி வல்லுனர்கள் ஆராய வேண்டியது அவசியமாகும்.

### அமைப்பு முறை மாற்றங்கள்

எதிர்கால உலகக்கிண்ண ஆட்டங்களில் அமைப்புமுறை மாற்றங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியது அவசியம் என்ற குரல்கள் பல பகுதிகளில் இருந்தும் எழுந்துள்ளன. ஆபிரிக்கா தமக்கு மொத்தம் மூன்று இடங்கள் இறுதியாட்டத்தில் தேவை எனக் குரல் எழுப்பியுள்ளன. இது

நாடுகள் அதிகரிக்க அதற்காக தம் இடங்கள் ஒன்றிரண்டை இழக்க ஐரோப்பா சம்மதிக்குமா என்பது கேள்விக்குறியே. மேலும் மேற்கண்ட பிராந்தியங்களுக்கு கூடிய இடம் கொடுத்துவிட்டார். ஆட்டத்தின் தற்போதைய அதியுயர் தரம் பாதிக்கப்படமாட்டாதா என்ற வினாவும் தொடர்ந்து எழுகின்றது. ஆனால் கமரூனை உதாரணம் காட்டி புதிய நாடுகளின் தரம் தற்போது வேகமாக வளர்ந்து வருவதால் இப்பிரச்சினை பெரிதாக இராதென்றும் கருதப்படுகின்றது.

இதற்கிடையில் விளையாட்டுநேரத்தில் மாற்றம் ஏற்படும் சாத்தியம் பற்றி FIFA உயர்மட்டத்தில் மேலோட்டமான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. அதாவது 25 நிமிடங்கள் கொண்ட 4 விளையாட்டு வேளைகளும் இடையில் 3 சிறிய இடைவேளைகளும் இங்கு கருதப்படுகின்றன. இது தற்போதைக்கு பேச்சளவிலான ஒரு விடயம் மட்டுமே என்றும் 1998 லும் கூட இது சாத்தியப்படுமா என்று தெரியவில்லை என்றும் உயர் அதிகாரிகள் கருதுகிறார்கள். இதனிடையில் 1998ஆம் ஆண்டுப் போட்டிகளை எங்கே அரங்கேற்றுவது என்பது பற்றிய ஊகங்கள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன. ஒருபுறம் ஐக்கிய அமெரிக்கா தனக்கு அந்தச்சந்தர்ப்பத்தைக் கேட்க இன்னொரு புறம் மொறோக்கோவும் பிரான்சும் தத்தம் நாடுகளில் நடாத்த விருப்பம் கொண்டுள்ளன. எனினும்இன்னும் சில நாடுகளும் தம் விருப்பத்தைத் தெரிவிக்கக் கூடும். இதேவேளை FIFA ஆசியாவில் இப்போட்டிகளை நடாத்தும் சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயக் கூடும் எனினும் இறுதி முடிவு 1992 இல் எடுக்கப்படும்.

### இத்தாலியும் மரடோனாவும்:-

யக் கழகமென்றான நெப்போலிக்கா கவிளையாடுபவர். உலகின் தலைசிறந்த வீரர் தம் நாட்டுக்கு விளையாடுவதை இத்தாலியர்கள் மிகப் பெருமையாக எண்ணுகின்றனர்.

இதனால் ஆர்ஜென்ரீனா வென்றதும் இத்தாலிய ரசிகருக்கு நியாயமாகவே ஒரு கோபம் எழுந்தது. "இவ்வாதங்கத்தைப் புரிந்து கொண்ட மரடோனா என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் என் நாட்டுக்காக விளையாட வேண்டுமல்லவா" என்று இத்தாலிய ரசிகர்களை ஆறுதல் படுத்தினார். மேலும் இத்தாலிய ரசிகர்களே இம்முறை கூடுதலான கவலைக்குட் பட்டவர்களாவர். தம் நாடு சாம்பியனாகவும் இல்லை. தாம் விரும்பும் மரடோனாவின் அணியும் சாம்பியனாகவில்லை என்பதில் அவர்களுக்கு இன்னொரு விதமான மனவருத்தம்.

இங்கிலாந்து ரசிகர்கள் இன்னொரு விதமாக தம் கவலையை வெளிப்படுத்தினர். மே. ஜேர்மனி இங்கிலாந்தை அரை இறுதியாட்டத்தில் வென்றதும் மே. ஜேர்மன் தயாரிப்பான கார்களைப் புரட்டி. கடைகளை உடைத்துத் தம் கவலையை வெளிப்படுத்தினர். இப்படியாகப் பல்வேறு விதமான உணர்வுகள் கலந்து வெளிப்பட்டன. இறுதியாட்டம் முடிவடைந்ததும்வென்றவர்களும் தோற்றவர்களும் குழந்தைகள் போல அழுது தம் உணர்வுகளை வெளியிட்டமை, ஜூல்ஸ்ரிமெட் வெற்றிக் கிண்ணத்தினைப் பெறுதல் அல்லது இழத்தல் என்பது எவ்வளவு உணர்வு பூர்வமான விடயம் என்பதை எடுத்துக் காட்டியது.

1990 உலகக் கிண்ணம் இவ்வாறாக பல்வேறு சர்ச்சைகள், கலகங்கள், உயர்தர ஏற்பாடுகள், பலவித உணர்வுகளின் மத்தியில் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இனி 1994 ஆட்டங்கள் பற்றிய ஏற்பாடுகள் அடுத்த வருடத்திலேயே ஆரம்பித்து விடும் ஒவ்வொருநாடும் தான் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப் பட வேண்டும் என்று மும்முரமாக பயிற்சியைத்

# இடம்மாற்றம்

**ராஜா ஸ்ரோர்**

36, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம் பாதுகாப்புக் கருதி கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது.

## ராஜா ஸ்ரோர்

(ஞான பாஸ்கரோதயா சங்கம் அண்மையில்)
தாரணி வீடியோ சென்ரர்,
கல்வியங்காடு.

வாடிக்கையாளர்களே: எம்மிடம் கடல் தொழிலுக்கான, எல்லாவித மீன்பிடி உபகரணங்கள் சகலதும் விற்பனைக்குண்டு.

எம்மிடம்: உள்ளூர், வெளியூர் புடைவைகள், சேட்டிங் சூட்டிங் வகைகள் யாவும் சகாயவிலையில் பெறலாம்.

நாடுங்கள் ஒருமுறை

(B/1236)



றாஜு ஸ்ரோர்ஸ்

## இடம்மாற்றம்

யாழ்ப்பாணம் 67, 69, கஸ்தூரியார் வீதியில் உள்ள றாஜு ஸ்ரோரின் ஒரு பகுதி வாடிக்கையாளரின் நலன் கருதி நல்லூர் கந்தசாமி கோயிலின் முன்பாக 25-7-90 வரை இடம் மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.

(R-511)



**தரமான - நாகரிகமான**
**'சேட்டிங்' துணி வகைகள்**
**வேட்டிகள் மற்றும்**
**புடைவை வகைகளின்**
**உற்பத்தியாளர்களுள் தனித்துவம்**
**மிக்கவர்கள்**

# கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தாவடி வடக்கு,
**கோக்குவில்.**

உங்கள் திருப்தியே
எங்கள் மகிழ்ச்சி!

(B1220)


(கொழும்புத்துறை)

யாழ். பிரதமதபால் திணைக்கள கணக்காளர் அலுவலகம் மானிப்பாய்க்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வலுவலகம் மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகில் உள்ள றியல்ஸ் இன்ஸ்ரிரியூட்ரியூஷன் சென்ரர் கட்டடத்தில் தற்பொழுது இயங்கி வருகின்றது. (24)

## ஹெலி மூலம் படையினர் இறங்குவராம்

(கொழும்பு)

''யாழ். கோட்டை முகாமினுள் சில தினங்களுக்கு முன்னர் ஹெலிக்கொப்டர் மூலம் காயமடைந்த படையினர் அப்புறப்படுத்தப்பட்டது போல மேலதிக படையினரும் ஹெலிக்கொப்டர் மூலம் இறக்கப்படுவார்கள்.''

இவ்வாறு இராணுவ உயர் அதிகாரி கூறியதாக கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று கூறுகிறது.

இதே போல புலிகள் முற்றுகையிடப்பட்ட முகாம்களுக்குள் படையினர் இறக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்த அதிகாரியின் நடவடிக்கையால்தான் கோட்டைக்குள் ஹெலி இறங்கியதாகவும் அச் செய்தி கூறுகிறது.

தால் ஒரேயொரு கோல், வித்தியாசத்தில் மே. ஜேர்மனி வெற்றிக் கிண்ணத்தை தட்டிச் சென்றுவிட்டது. இம்முறை இப்போட்டியில் யார் வென்றிருந்தாலும் மூன்று முறை கிண்ணத்தை வென்றவர்களாவார்கள். இதே வேளை லத்தீன் அமெரிக்க நாடொன்று இரண்டாவது முறையாக ஐரோப்பாவில்-பிரேசிலுக்கு அடுத்தபடியாக-வெற்றிபெறும் வாய்ப்பை ஆர்ஜென்ரீனா தவறவிட்டுவிட்டது. இதேவேளை தொடர்ந்து மூன்றாவது முறையாக இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்ற நாடென்ற சாதனையை மே. ஜேர்மனி புரிந்துள்ளது. ஆர்ஜென்ரீனாவின் தலைவரும் உலகின் முதன்மை ஆட்டக்காரருமான டியாகோ அமென்டோ மரடோனா ஒரு கோல்கூடப் போட இயலாத தொடராக 1990 உலகக் கிண்ணத் தொடர் அமைந்ததும் குறிப்பிடத்தக்கது. உலகக்கிண்ண இறுதியாட்டமொன்றில் ஒரு ஆட்டக்காரர் வெளியேற்றப்பட்டமை அறுபது வருட வரலாற்றில் இம்முறையே நடந்தேறியுள்ளது. ஆர்ஜென்ரீன வீரர் மென்சோன் வெளியேற்றப் பெனால்டி முறை காட்டுவதாகப் பலர் அங்கலாய்க்கிறார்கள். மேலும் இருபக்க கோல் காப்பு வீரர் மீதும் பெரும் சுமையொன்றைச் சுமத்தி ஆட்டத்தின் முடிவை அவர்கள் மீது திணிப்பது நியாயமானதா என்றொரு வினாவையும் எழுப்புகிறார்கள். இதுபற்றி வல்லுனர்கள் ஆராய வேண்டியது அவசியமாகும்.

### அமைப்பு முறை மாற்றங்கள்

எதிர்கால உலகக்கிண்ண ஆட்டங்களில் அமைப்புமுறை மாற்றங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியது அவசியம் என்ற குரல்கள் பல பகுதிகளில் இருந்தும் எழுந்துள்ளன. ஆபிரிக்கா தமக்கு மொத்தம் மூன்று இடங்கள் இறுதியாட்டத்தில் தேவை எனக் குரல் எழுப்பியுள்ளன. இது இவ்வாறாயின் மத்திய, ஐக்கிய அமெரிக்கா, ஆசியப் பிராந்தியங்களும் தமக்குக் கூடிய இடம் தேவை எனக் குரல் எழுப்புவது சாத்தியமே. இவ்வகைக் கோரிக்கைகள் நியாயமானதே என FIFA தலைவர் ஹவலாஸ்கே சோடி காட்டியுள்ளார். ஆனால் ஒரு புறம் இறுதிப் போட்டிக்கு வில்லை என்றும் உயர் அதிகாரிகள் கருதுகிறார்கள். இதனிடையில் 1998ஆம் ஆண்டுப் போட்டிகளை எங்கே அரங்கேற்றுவது என்பது பற்றிய ஊகங்கள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன. ஒருபுறம் ஐக்கிய அமெரிக்கா தனக்கு அந்தச்சந்தர்ப்பத்தைக் கேட்க இன்னொரு புறம் மொறோக்கோவும் பிரான்சும் தத்தம் நாடுகளில் நடாத்த விருப்பம் கொண்டுள்ளன. எனினும்இன்னும் சில நாடுகளும் தம் விருப்பத்தைத் தெரிவிக்கக் கூடும். இதேவேளை FIFA ஆசியாவில் இப்போட்டிகளை நடாத்தும் சாத்தியக் கூறுகள் பற்றியும் ஆராயக் கூடும் எனினும் இறுதி முடிவு 1992 இல் எடுக்கப்படும்.

### இத்தாலியும் மரடோனாவும்:-

இத்தாலிய ஆர்ஜென்ரீன கால இறுதியாட்டம் மரடோனாவுக்குப் பெரும் சங்கடத்தைக் கொடுத்த ஆட்டமாகும். இத்தாலிய ரசிகர்கள் மரடோனாவைத் தம்மவருள் ஒருவராகவே எண்ணுகின்றனர். மரடோனா இத்தாலி டன. இறுதியாட்டம் முடிவடைந்ததும்வென்றவர்களும் தோற்றவர்களும் குழந்தைகள் போல அழுது தம் உணர்வுகளை வெளியிட்டமை, ஜூல்ஸ்ரிமெட் வெற்றிக் கிண்ணத்தினைப் பெறுதல் அல்லது இழத்தல் என்பது எவ்வளவு உணர்வு பூர்வமான விடயம் என்பதை எடுத்துக் காட்டியது.

1990 உலகக் கிண்ணம் இவ்வாறாக பல்வேறு சர்ச்சைகள், கலகங்கள், உயர்தர ஏற்பாடுகள், பலவித உணர்வுகளின் மத்தியில் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இனி 1994 ஆட்டங்கள் பற்றிய ஏற்பாடுகள் அடுத்த வருடத்திலேயே ஆரம்பித்து விடும் ஒவ்வொருநாடும் தான் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று மும்முரமாக பயிற்சியைத் தொடங்கிடும். ரசிகர்கள் இன்னொரு திரு விழாவிற்கு நான் காண்டுகள் காத்திருக்க வேண்டும். அது நீண்ட காலமாயினும் இன்று முதலே உதைபந்தாட்ட ரசிகர்கள் அந்நாளை எதிர் நோக்கத் தொடங்கி விடுவார்கள்.

வவுனியாவில்

# நீர்ப்பாய்ச்சல் இன்மையால் பயிர்ச் செய்கை பாதிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நெல் மற்றும் பல விளை பொருட்கள் பயிரிடப்பட்ட காணிகளுக்கு நீர் பாய்ச்சப் படாத காரணத்தினால், மேற்படி நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிர்கள்கருகிப்போவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இராணுவத்தினரின் நடவடிக்கையினாலும், மண் எண்ணை பற்றாக்குறையினாலுமே கருகும் நிலை பயிர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இப் பகுதியில் உள்ள பலர் இராணுவத்தினருக்குப்பயந்து தமது நிலங்களை விட்டும் தோட்டங்களை விட்டும் வெளியேறி உள்ளனர். மண் எண்ணைத் தட்டுப்பாட்டினால் பல காணிகளுக்கு நீர் பாய்ச்சுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி காரணங்களினால் பயிரிடப்பட்ட பல ஏக்கர் நிலங்கள், விவசாயிகளினால் கைவிடப்பட்டுள்ளன.

இதனால் எதிர்காலத்தில் வவுனியா பகுதியில் விளை பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

## எச்சரிக்கையாக இருக்கவும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பெரும்பாலான தேநீர்க் கடைகளிலும், ஐஸ்கிரீம், ஐஸ்பழம், யூஸ் போன்றன தயாரிக்கும் இடங்களிலும் தற்போது சீனிக்குப் பதிலாக ''சக்கரீன்'' பயன்படுத்தப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'சக்கரீன்' உடல் நலத்திற்குத் தீங்குபயக்கக் கூடிய பொருளாகும். இது விடயமாக பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டப்படுகிறார்கள். (மு)


உ

ஓம் சக்தி
**சாவகச்சேரி**
**அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்**

# மகோற்சவ விழா

வருடாந்த மகோற்சவம் வியாழக்கிழமை ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

12-7-90 வியாழன் காலை 10 மணிக்கு கொடியேற்றம்

20-7-90 வெள்ளி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா

21-7-90 சனி காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா

தேர்த்திருவிழாவுக்கு காவடி எடுக்கும் அடியார்கள் தேரன்று காலை 10 மணிக்குள் தேவஸ்தானத்தை வந்து சேர வேண்டும் என அன்புடன் கோரப்படுகின்றீர்கள்.

25-7-90 புதன் கிழமை ஆடிப்பூரத்தினத்தையொட்டி பி-ப 3 மணிக்கு திருவிளக்குப் பூசை நடைபெறும் என்பதை தேவஸ்தானம் அறியத் தருகிறது.

**விளம்பர அன்பளிப்பு**

P.S. பத்மநாதன், S.P. பத்மசீலன்
செல்வி புஸ்பலதா பத்மநாதன்
தென்மட்டுவில்

(B/1238)

### சிந்தனைக்கு

உலகில் ஒருவன் தாழ்ந்துள்ள போது ஒரு பவுண்டு உப தேசத்தைவிட ஒரு அவுன்ஸ் உதவி மேலானது.

- புல்வர் லிட்டன்


ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 11-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2808
த. பெ. எண் 05


## இவர்களும் சமூக விரோதிகளே

சிறிலங்கா சிங்கள அரசபடைகளினதும், திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களக்காடையர்களினதும் அட்டூழியங் களைத் தாங்கமுடியாது, அல்லல்பட்டு ஆற்றாது சொந்த வீடுவாசல்களையும் விட்டு வெளியேறி தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள திருக்கோணமலையிலிருந்து பெருமளவில் யாழ். குடாநாட்டுக்குத் தமிழ் மக்கள் வந்துகொண்டிருக்கிறார்கள்.

உடுத்த உடையுடன் குழந்தைகளுடன் இரவோடிரவாக வீட்டிலிருந்து வெளியேறி அக்கிரமக்காரர்களின் கண்களுக்குத் தப்பி காடு மேடுகள் கடந்து, யாழ். குடா நாட்டிலுள்ள தமிழ்ச் சகோதரர்கள் தங்களை ஆதரித்துக் காப்பாற்றுவார்களென்ற நம்பிக்கையுடன் இவர்கள் குடும்பம் குடும்பமாக வந்துசேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

குழந்தைகளோடு வரும்பொழுது, பால் கேட்டு அழும் குழந்தைக்கும் - பசிக்குச் சோறு கேட்டு அழும் பிள்ளைக்கும் தங்கள் களையைத் தீர்த்துக்கொள்ளவும் வழியில் எதையாவது வாங்கிக் கொள்ளலாமென்ற நம்பிக்கையில் கையுடன் எடுத்து வரக்கூடிய பெறுமதி வாய்ந்த பொருள்களையும் சிலர் எடுத்து வருகிறார்கள்; மற்றும் சிலர் வீட்டிலிருந்த பணம் மற்றும் நகைகளையும் மறைத்துவைத்து எடுத்து வருகிறார்கள்; சிலர் தம்மிடமுள்ள சைக்கிள், சிறிய மோட்டார்சைக்கிள் போன்றவற்றையும் பயணத்துக்கு வசதியாக எடுத்து வருகின்றனர்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பாதுகாப்புத் தேடி ஓடிவரும் மக்களிடம் அவர்களைக் ''கரை சேர்க்க'' வழியிலுள்ள புடவைக்கட்டுப் போன்ற இராமங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் சகோதரர்கள் ''தவிச்ச முசல்'' அடிக்கிறார்கள்.

நான்காயிரம் ஐயாயிரம் என்று ஒரு பவுண் விற்கப்படும் இக்காலத்தில் பவுண் ஐநூறு, ஆயிரம் ரூபாய்ப்படி நகைகளை விலைக்கு வாங்கும் தமிழ்ப்பேசும் சகோதரர்கள் சைக்கிள், வானொலிப்பெட்டிகள் போன்ற பொருள்களையும் இதேபோன்று அநியாய விலைக்கு வாங்கிக்கொண்டு அதிக கட்டணம் பெற்று அல்லல்பட்டு வரும்மக்களைக்கரையேற்றுகிறார்கள்; வழிகாட்டுகிறார்கள்.

சிறிலங்கா அரச படைகளினதும் சிங்களக்காடையர் களினதும் அட்டூழியங்களிலிருந்து உயிர்தப்பியதுடன் தாம் பாடுபட்டுத் தேடிய பொருள்கள் சிலவற்றையாவது காப்பாற்றி குழந்தைகளைக் காப்பாற்றலாம் என்று கொண்டுவரும் பொருள்களும் வழியில் தமிழ்ச் சகோதரர்களிடம் பறிகொடுக்கும் அவலநிலை.

# இன்று நடப்பது விடுதலைப் போராட்டம்;

# நியாயத்தை மதிக்கும்

# சர்வதேசசமூகம்உதவட்டும்

சிவா

இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து கடந்த நாற்பது ஆண்டுகாலமாக தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காக பேச்சு வார்த்தை மூலமும் அகிம்சை வழிகளிலும் போராடி வந்துள்ளனர். இவை வெற்றியளிக்காத நிலையிலேயே தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. விடுதலைப் போராட்டங்களில் ஆயுதப் போராட்டம் புதிதான ஒன்றல்ல. உலக நாடுகள் பலவற்றில் விடுதலைப் போராட்டம் ஆயுதமேந்திய புரட்சியாக, போராட்டமாகவே இருந்து வந்திருக்கிறது. இதுவரலாற்று உண்மை.

மேலும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஆபிரிக்க விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களே நியாயங்களையும், உரிமைகளையும் அடைவதற்கு எல்லா முறைகளையும் கையாளலாம் என வன்முறையைக் கைவிடுமாறு கோரிய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ்ஷிடம் கூறியிருப்பதையும் கவனிக்க வேண்டும்.

1989 ஏப்ரலில் ஸ்ரீலங்கா அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று பேச்சுவார்த்தைக்கு சென்ற விடுதலைப்புலிகள், தமிழர்களின் அபிலாஷைகள் ஸ்ரீலங்கா அரசினால் உணரப்பட்டு ஏற்கப்படுமென்று எதிர்பார்த்தே சென்றனர். அந்த அடிப்படையிலேயே அவர்கள் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து கலந்து கொண்டனர்.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு பிரச்சினைகளை சர்வகட்சி மாநாட்டுக்கு மாற்றியது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஸ்ரீலங்கா ஜனாதிபதியும் அவரது அரசும், எதிர்க்கட்சிகளும்அறிந்திருக்கவில்லை என யாராவது கூற முடியுமா?

சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டு தமிழர் பிரச்சினைகள் விவாதிக்கப்படும் என்றதுமே ஒரு இனவாதக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதைப் பகிஷ்கரித்தது. அரசியல் தீர்வு காண்பதில் அரசுக்கு இது ஒரு முட்டுக் கட்டையாக இருக்கிறதென சிங்கள அரச தரப்பினால் கூறப்பட்டது. எனவே தீர்வுகள் எட்டப்படாமல் இழுத்தடிக்கப்பட்டது.

சிங்கள அரசும் இருதய சுத்தியுடன் செயற்படவில்லை. இதற்கு ஆதாரமாக வட கிழக்குமாகாண சபைக்கலைப்பைக் குறிப்பிடலாம். இச் சபையை கலைப்பதற்கு சட்டத்திருத்தம் தேவையென 1990 மார்ச் மாதத்திலேயே அரசுக்கு தெரிந்திருந்தும் அதைச் செய்யவில்லை. அப்படிச் செய்திருந்தால் ஜூன் மாத முதற் பகுதியிலேயே வட- கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டிருக்கும். தேர்தல் நடாத்தக்கூடிய சூழ் நிலையும் ஏற்பட்டிருக்கும். ஆனால் அரசாங்கமோ இதை வேண்டுமென்றே தாமதித்து ஜூலை மாதத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து நிறைவேற்றுகிறது.

இதற்கெல்லாம் மேலாக வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி ஆராய ஜனாதிபதியினால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதிநிதியாக பதில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்து கொண்டார். இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளை தாம் ஆதரிப்பதாக அவர் தெரிவித்தார். இன்னுமொரு சிங்கள இனவாதக் கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியும் இதே கொள்கையையே பின்பற்றுகிறது. சார்க் கூட்டமைப்பு நாடுகளுக்கு நிலைமையை விளக்க சர்வகட்சிக் குழு அனுப்பப்பட வேண்டும் என்ற முடிவும் இந்த கூட்டத்திலேயே எடுக்கப்பட்டது. இதில் விடுதலைப் புலிகளுக்கு இஸ்ரேலின் ''மொசாட்'' அமைப்பு பயிற்சியளிக்கிறது என கற்பனைக்குக் கூட எட்டாத அப்பாற்பட்ட குற்றச் சாட்டைச் சாட்டியவரும் உள்ளடக்கம்!

இப்பொழுது நடைபெறும் யுத்தம் சிங்கள இனவாத ஏகாதிபத்திய அநீதிக்கும் அதிலிருந்து விடுதலை பெற விழையும் நீதிக்கும் இடையிலான போராட்டமே. சிங்கள மக்களின் அரசியலில் தமிழர்கள் எப்பொழுதும் தலையிட்டதே இல்லை. ஆனால் தமிழர்களின் அரசியல் உரிமைகளில் தேசியம் என்ற போர்வையில் சிங்கள இனவாதம் எப்பொழுதும் தலையிட்டே வந்திருக்கிறது. சிங்கள இனவாதக்கட்சிகளுக்கும் தலைவர்களுக்கும் தலைபணியாத எல்லா தமிழ்க்கட்சிகளும் தமிழ் தலைவர்களும் இனவாதிகள் என்றே நாமம் சூட்டப்பட்டனர்.

இன்றைய ஆயுதப் போராட்டம் தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டமே. அதை உணர, அல்லது ஏற்க மறுக்கும் தெற்கத்திய சிங்கள அரசியல் கட்சிகள் எல்லாம் ஒருமித்து ஆயுதத்தைப் பற்றி பேசுகின்றனரே தவிர ஆயுதம் ஏந்தியதற்கான காரணத்தை ஏற்று தமிழ்பேசும் மக்களின் உரிமைகளையும், சுயாட்சியையும் வழங்குவதற்கு எதுவித கருத்துள்ள நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அப்படிச் செய்தால் ஆயுதப் போராட்டம் தானாகவே நின்றிருக்கும்.

ஸ்ரீலங்கா அரசும் ஏனைய எல்லா சிங்களக் கட்சிகளும் இன்றைய போரை ஒரு இரு நாட்டு யுத்தம் போன்ற நிலையிலேயே அணுகுவது, தமிழர்களை அழிப்பதற்காகிய ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக உள்ளது. உள்நாட்டு விவகாரம் என்ற போர்வைக்குள் தமது இனவாத நடவடிக்கைகளையும், தமிழின படுகொலைகளையும், உடைமைகள், சொத்துக்கள் அழிப்பு 'களையும் நியாயப்படுத்த முயல்கின்றன. உண்மையில் தமிழ்ப் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தை அடிமைப்படுத்தத் தொடுத்த சிங்கள இனவாத யுத்தமே இது.

எனவே யதார்த்த பூர்வமான உண்மை நிலையை சர்வதேச சமூகம் உணர வேண்டும். அரசியல் ரீதியாக வேறுபட்ட எல்லா சிங்களக் கட்சிகளும் தமிழ்பேசும் மக்களுக்கெதிரான நடவடிக்கைகளிலும், போரிலும் ஒற்றுமைப்பட்டுச் செயல்படுவது ஒன்றே அவர்களது சிங்கள இனவாதத்தன்மையை தெளிவாக எடுத்துக் காட்டும்.

எனவே இப்பொழுது நடைபெறும் போராட்டம் உரிமை மறுக்கப்பட்ட தமிழ்ப்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் என்பதை அங்கீகரித்து எமக்கு ஆதரவும், உதவியும் வழங்க வேண்டும் என நியாயங்களை மதிக்கும் சர்வதேச சமூகத்தை வேண்டிக் கொள்கிறோம்.

### லைபீரியாவில் கடும் சண்டை

## தீவிரவாதிகள் வெற்றிப்பாதையில்;

## அரசின் சமாதான அழைப்பு நிராகரிப்பு!

(மன்றோவியா)

லைபீரியாவில் அரச படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சண்டையில் தீவிரவாதிகள் வெற்றிப் பாதையை நோக்கி சென்று கொண்டி

தலைநகரான மன்றோவியாவுக்கான உள், வெளிப் பாதைகள் அனைத்தும் தீவிரவாதிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், தலைநகரை கைப்பற்றும் முயற்சி

கிராமப் புறங்களிலும் இரு பகுதியினருக்கும் இடையில் சண்டைகள் இடம் பெற்று வருவதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக சர்வதேச அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### அமெரிக்க படைத்தளம்

### தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால யுத்தம்காரணமாகவெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்யும் முகமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் இன்று புதன்கிழமை பத்து முப்பது மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் வேண்டிக் கொண்டுள்ளார்.

தம்மிடமுள்ள சைக்கிள், சிறிய மோட்டார்சைக்கிள் போன்றவற்றையும் பயணத்துக்கு வசதியாக எடுத்து வருகின்றனர்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு பாதுகாப்புத் தேடி ஓடிவரும் மக்களிடம் அவர்களைக் ''கரை சேர்க்க'' வழியிலுள்ள புடவைக்கட்டுப் போன்ற கிராமங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் சகோதரர்கள் ''தவிச்ச முசல்'' அடிக்கிறார்கள்.

நான்காயிரம் ஐயாயிரம் என்று ஒரு பவுண் விற்கப்படும் இக்காலத்தில் பவுண் ஐநூறு, ஆயிரம் ரூபாய்ப்படி நகைகளை விலைக்கு வாங்கும் தமிழ்ப்பேசும் சகோதரர்கள் சைக்கிள், வானொலிப்பெட்டிகள் போன்ற பொருள்களையும் இதேபோன்று அநியாய விலைக்கு வாங்கிக்கொண்டு அதிக கட்டணம் பெற்று அல்லல்பட்டு வரும்மக்களைக்கரையேற்றுகிறார்கள்; வழிகாட்டுகிறார்கள்.

சிறிலங்கா அரச படைகளினதும் சிங்களக்காடையர்களினதும் அட்டூழியங்களிலிருந்து உயிர்தப்பியதுடன் தாம் பாடுபட்டுத் தேடிய பொருள்கள் சிலவற்றையாவது காப்பாற்றி குழந்தைகளைக் காப்பாற்றலாம் என்று கொண்டுவரும் பொருள்களும் வழியில் தமிழ்ச் சகோதரர்களிடம் பறிகொடுக்கும் அவலநிலை.

இத்தனை கஷ்டங்களையும் தாண்டி யாழ். குடாநாட்டுக்கு வந்தால் அகதிமுகாமுக்குச் செல்வதற்கு வாகனச் சாரதிகள் அதிக கட்டணம் கேட்டுத் தொல்லை கொடுக்கிறார்கள்.

அகதிமுகாம்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டோமே என்று ஆறுதல் பெறுவதற்கு அங்கேயும் போலி உள்ளூர் அகதிகளாலும் நெருக்கடி.

சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் அடியோ, குண்டுவீச்சோ பாதிக்காத பகுதிகளில் வசதியாக வாழ்ந்து வருபவர்கள் சிலரும்கூட இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் இடம் பிடித்துக்கொள்கிறார்கள்,

இந்தப் போலி உள்ளூர் அகதிகள் பலரும் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு அகதிமுகாம்களுக்குச் சென்று தங்கள் பெயர்களை அகதிகளாகப் பதிவுசெய்துகொண்டு அகதிகளுக்குக் கிடைக்கும் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு மாலையில் வீடு திரும்புகிறார்கள்.

சில போலி உள்ளூர் அகதிகள் அகதிமுகாம்களில் வசதியாகத் தங்கும் இடங்களைப் பிடித்துக்கொண்டு அங்கு கிடைக்கும் நிவாரணப் பொருள்களை வைத்துக் குடித்தனமும் நடத்துகிறார்கள்.

இந்தப்போலி உள்ளூர் அகதிகளின் செய்கைகளால் திருக்கோணமலை போன்ற மாவட்டங்களிலிருந்து பெரும் துன்பங்களை அனுபவித்து, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வந்துள்ள உண்மையான அகதிகளுக்குக் கிடைக்கவேண்டிய அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கிடைக்காமல் போய்விடுகிறது.

அல்லல்பட்டு ஆற்றாது அகதிகளாக வரும் மக்களிடம் வழியில் அகப்பட்டதைச் சுருட்டிக்கொள்ளும் தமிழ்பேசும் சகோதரர்களும்சரி, உண்மையான அகதிகளுக்குக் கிடைக்கவேண்டிய அத்தியாவசிய நிவாரணப் பொருள்களைச் சுரண்டும் போலி உள்ளூர்த் தமிழ்ச் சகோதரத் தமிழ் ''அகதிகளும்'' சரி சமூகத் துரோகிகளாகக் கணிக்கப்படவேண்டியவர்கள்.

இவர்கள் சிறிலங்கா சிங்கள ஆயுதப்படையினரையும் சிங்களக்காடையர்களையும்விடக் கேடுகெட்டவர்களென்றே கருதப்படவேண்டும்.

அகதிமுகாம்களை நிர்வகிப்பவர்களும் அகதிகளுக்கு நிவாரண உதவி வழங்கும் நடவடிக்கைகளிலீடுபட்டு உள்ளவர்களும் போலி உள்ளூர் அகதிகளை இனம்கண்டு அவரவர் சொந்த இடங்களுக்குத் துரத்தியடித்து மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது மிகவும் அவசியம்.

---

பிரச்சினைகளை சர்வகட்சி மாநாட்டுக்கு மாற்றியது. தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஸ்ரீலங்கா ஜனாதி

ஆனால் அரசாங்கமோ இதை வேண்டுமென்றே தாமதித்து ஜூலை மாதத்தில் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்து

என கற்பனைக்குக் கூட எட்டாத அப்பாற்பட்ட குற்றச்சாட்டைச் சாட்டியவரும் உள்ளடக்கம்!

தற்கு எதுவித கருத்துள்ள நடவடிக்கையையும் எடுக்கவில்லை. அப்படிச் செய்தால் ஆயுதப் போராட்டம் தானா

என நியாயங்களை மதிக்கும் சர்வதேச சமூகத்தை வேண்டிக் கொள்கிறோம்.

---

### லைபீரியாவில் கடும் சண்டை

# தீவிரவாதிகள் வெற்றிப்பாதையில்; அரசின் சமாதான அழைப்பு நிராகரிப்பு!

(மன்றோவியா)

லைபீரியாவில் அரச படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் சண்டையில் தீவிரவாதிகள் வெற்றிப் பாதையை நோக்கி சென்று கொண்டிருப்பதுடன், அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள மேற்படி சண்டையை நிறுத்துவதற்கான சமாதானக் கோரிக்கை அவர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன.

தலைநகரான மன்றோவியாவுக்கான உள், வெளிப் பாதைகள் அனைத்தும் தீவிரவாதிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், தலைநகரை கைப்பற்றும் முயற்சியில் படையினருடனான மோதல் கடுமையாக இடம்பெற்று வருகின்றது. இந்த மோதலிலும் தீவிரவாதிகள் முன்னேறி வருவதாக கூறப்படுகின்றது.

தலைநகரை தவிர்த்து கிராமப் புறங்களிலும் இரு பகுதியினருக்கும் இடையில் சண்டைகள் இடம் பெற்று வருவதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக சர்வதேச அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## தமிழ்நாட்டிற்கு நாளாந்தம் ஆயிரக்கணக்கில் அகதிகள்

(இராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து தினமும் ஆயிரக்கணக்கில் அகதிகள் படகுகள் மூலம் இராமேஸ்வரம் பகுதிக்கு வந்து குவிகின்றதாக தமிழகத்தில் இருந்து வெளிவரும் ''தினமணி'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தமிழக அரசு அதிகாரிகள் இவர்களுக்கான நிவாரணப் பணிகளை செய்துகொண்டிருக்கின்றனர்.

சுமார் எட்டுமணி நேரம் தாம் கடலில் பயணம் செய்ததாக அவர்கள் செய்தியாளர்களிடம் கூறினார்கள்.

இதேவேளை 3600 அகதிகள் இராமேஸ்வரம் வந்து சேர்ந்துள்ளார்கள் என்று இந்திய வானொலி செய்தி அறிக்கை தெரிவிக்கின்றது; அண்மைக் கால அனர்த்தங்களினால் இதுவரை மொத்தம் 13,000 க்கு மேற்பட்ட அகதிகள் தமிழ்நாடு சென்றுள்ளார்கள்.

## நீண்டகால சர்வதேச உதவி நமீபியாவுக்கு வேண்டுமாம்

(அடிஸ்அபா)

நமீபியா தனது பொருளாதார பலத்துக்காக சிறுபான்மைவெள்ளை இனதென்னாபிரிக்காவை சார்ந்திருக்கும் நிலைமை வெகுவிரைவில் முறியடிக்கப்படும் என்று அந்நாட்டு அதிபர் கேம்நுஜோமா தெரிவித்துள்ளார்.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் மூன்று நாள் உச்சி மாநாட்டின் போது இதனைத் தெரிவித்த அதிபர் நுஜோமா தாம் மேற்கொள்ள உள்ள இந்த முறியடிப்பு நடவடிக்கைக்கு சர்வதேச நாடுகளின் நீண்டகால உதவி நமீபியாவுக்கு தேவைப்படுகின்றது என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க ஆட்சியிலிருந்து விடுதலை பெறும் வகையில் போராட்டம் நடத்திய நமீபியாவுக்கு ஆதரவு செலுத்திய ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்துக்கு தனது நன்றியையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை ஐ. நா. சபையின் பொதுச் செயலாளர் திரு. பரஸ் - டீ. கொய்யா அண்மைக்கால நிகழ்வுகள் நமீபியாவின் இந்தப் பிரச்சினைக்கு நல்ல பலனை எட்டும் நம்பிக்கையை உருவாக்கி உள்ளதென்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க படைத்தளம் வாபஸ் பெறப்படும்

(நியூயோர்க்)

கிறீஸ் நாட்டில் அமைந்துள்ள அமெரிக்காவின் படைத்தளங்கள் பகுதி, பகுதியாக அகற்றப்பட உள்ளன.

இந்த படைத்தளம் அகற்றுதல் குறித்து அமெரிக்காவும், கிறீஸுக்கும் இடையில் நீண்டகாலமாக இடம் பெற்று வந்த பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் இது சம்பந்தமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாயிற்று.

அமெரிக்கா-கிறீஸ் ஆகிய இரு நாடுகளுக்கிடையில் இடம்பெற்ற இந்த ஒப்பந்த கைச்சாத்தலின் முதல் நடவடிக்கையாக இரண்டு முக்கிய தளங்கள் கூடிய விரைவில் அகற்றப்பட உள்ளன. இவற்றில் ஒன்று இவ்வாண்டிலேயே மூடப்பட உள்ளதுடன் மற்றையது அடுத்த ஆண்டு ஜூன் மாதம் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இனஒதுக்கலை ஒழிக்கும்வரை போராட்டம் ஓயாது

### - மண்டேலா முழக்கம்

'சிறுபான்மை வெள்ளையர்கள் தென்னாபிரிக்காவில் மேற்கொண்டு வரும் இன ஒதுக்கல் நடடிக்கைகளை பூண்டோடு ஒழிக்கும்வரை எமது போராட்டம் ஓயாது' என்று தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் திரு. நெல்சன் மண்டேலா முழக்கம் செய்துள்ளார்.

ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் மூன்று நாள் உப் மாநாடு எத்தியோப்பியாவின தலைநகரான அடிஸ் அபாவில் நடைபெற்று வருகின்றது. இந்த மாநாட்டில் தென்னாபிரிக்காவின் நிலைகுறித்து சிறப்பு பேருரை நடத்திய போதே திரு. நெல்சன் மண்டேலா சிறுபான்மை வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக இவ்வாறு வீரமுழக்கம் செய்துள்ளார்.

விரைவாகவோ தாமதமாகவோ சிறுபான்மை வெள்ளையர் இனத்துக்கு எதிராக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு செலுத்திய சர்வதேச சமுதாயத்துக்கும், ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்துக்கும் தனது நன்றியையும் திரு. மண்டேலா தெரிவித்துக்கொண்டார்.

இன ஒதுக்கல் நடவடிக்கைகளை அடியோடு ஒழித்துக் கட்டும் வரையில் ஏ. என். சி தனது முழுமையான அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டும் என்றும் தனது பேருரையின்போது திரு மண்டேலா தெரிவித்தார்.

## 14 படையினர்பலி

ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற ஒரு கண்ணி வெடி சம்பவத்தில் பதினான்குபடையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் பலர் பலத்த காயமடைந்துள்ளார்கள்.

இந்தக் கண்ணி வெடி சம்பவம் பாகிஸ்தான்எல்லையில் அமைந்துள்ள பத்தியா என்னும் நகரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அண்மைக்கால யுத்தம்காரணமாகவெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு தம்மாலான உதவிகளைச் செய்யும் முகமாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் இன்று புதன்கிழமை பத்து முப்பது மணிக்கு நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் கூடுமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் வேண்டிக் கொண்டுள்ளார்.

## முறைசாராக் கல்வி விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் முறைசாரா கல்விப்பிரிவுகளில் கற்கும் மாணவருக்கான விசேட கூட்டம் இன்று புதன் காலை 10.00 மணிக்கு வெவ்வேறு இடங்களில் நடைபெறும் என கல்வி அதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி, வண்ணை நாவலர் பாடசாலை ஆகிய கல்லூரிகளில் கற்கும் மாணவர் கல்வித் திணைக்களத்துக்கருகாமையில் இருக்கும் நல்லூர் ஸ்ரேசன் சீ. சீ. த. த. பாடசாலையிலும்,

கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் கற்கும் மாணவர்கள் யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்,

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவர்கள் நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும்,

ஏனைய பாடசாலை மாணவர்கள் தத்தமது பாடசாலைகளிலும் கூட வேண்டும் எனவும் கல்வி அதிகாரி சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

## கெடுபிடி அதிகரிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் இருந்து படகுகள் மூலம் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டுக்கு வருவதில் ஸ்ரீலங்கா கடற்படையினரின் கெடுபிடி அதிகரித்துள்ளதாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

# மத்தியஸ்தத்துக்கு அழைத்தால் பிரிட்டன் பரிசீலனை செய்யும்!

## கொழும்பிலுள்ள தூதுவர் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குப் பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டால் அது சாதகமாக பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்று இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் டேவிற் கிளான்ரோன் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

ஆனால் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூக ஈடுபாட்டைப் பற்றிக் கூறியதேதவிர இதுவரை பிரித்தானிய அரசாங்கத்திற்கு அழைப்பு விடவில்லை எனவும் டேவிற் கிளாஸ்ரோன் தெரிவித்தார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா விடுத்துள்ள வேண்டுகோள் தொடர்பாக வெளிநாட்டு ராஜ தந்திரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இலங்கை ஜனாதிபதியின் எண்ணங்கள் பற்றித் தமக்குத் தெளிவாகத் தெரியவில்லை என்று மேற்குலக ராஜதந்திரிகளும், எந்த ஒரு எதிர்காலப் போர் நிறுத்தத்தையும் புலிகள் கௌரவிப்பார்கள் என்பதற்கு சர்வதேச உத்தரவாதத்தை அவர் கோருவதாக இருக்கலாம் எனவும் வேறு சில ராஜதந்திரிகளும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மிதிவெடியால்

## மூன்று இராணுவத்தினர் கால்களை இழந்தனர்

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில், மிதிவெடியில் சிக்குண்டு மூன்று இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

இச்சம்பவம் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

தமிழ் கிராமங்களை நோக்கி தாக்குதலை மேற்கொள்ளும் எண்ணத்துடன் தரை மார்க்கமாக வந்தஇராணுவத்தினரே கால்களை இழந்தனர்.

இவ்வாறு கால்களை இழந்த படையினரை மற்றைய படையினர்கள் தூக்கிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படிபகுதியில்விடுதலைப் புலிகள் இராணுவத்தினரை தமிழ்க் கிராமப் பகுதிகளுக்குள் புக விடாமல் காவல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## எரிந்த நிலையில் 4 சடலங்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் நான்கு சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டதாகக் கொழும்புச் செய்தி கூறுகிறது.

## காட்டுமாங்குளத்தில் இருந்து தமிழர்கள் வெளியேற்றம்

(மன்னார்)

வவுனியா-செட்டிகுளம் எல்லைக்கிராமமான காட்டு மாங்குளத்தில் உள்ள தமிழர்கள் அச்சம் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்து மடுப் பகுதிக்கு வந்துள்ளனர்.

இதன் எல்லைப்புற சிங்களவர்கள் ஆயுதங்களைக் காண்பித்து இவர்களை பயமுறுத்தி, உடைமைகளைஅபகரித்துவருகின்றனராம்.

சிங்கள மக்களின் பாதுகாப்புக்காக வழங்கிய ஆயுதங்கள் மூலம் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

## அகதிகள் கைது

(கொழும்பு)

மன்னாரில் பேசாலை கடல் பகுதியில் இந்தியாவுக்குச் சென்றுகொண்டிருந்த படகு ஒன்றை ஸ்ரீலங்கா கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

இந்தப்படகில் பதினொரு ஆண்களும், எட்டுப் பெண்களும் இரு குழந்தைகளும் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடற் படையால் மக்கள் பீதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடலில் நடைபெறும் கடற்படைப் படகினரின் சோதனைகளாலும், பீரங்கி வேட்டுக்களாலும் அச்சமுற்ற மக்கள், நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணத்தை மேற்கொள்ளப் பயப்படுகின்றனர்.

வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெற்றுவந்த படகுச் சேவைகளை இரு தினங்கள் மாத்திரம் நடாத்த அச்சம் காரணமாக முடிவுசெய்யவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

நெடுந்தீவு மக்களின் அனை

மாகாணசபை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிக்கையிழந்தது. தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் திட்டமாக இது அமையவில்லையென முந்திய ரஜீவ் அரசு ஒப்புக்கொண்டது.

### நிரந்தர தீர்வாக ஏற்கவில்லை

நாம் பிரேமதாசாஅரசுடன் பேச்சுக்கள் நடத்தியபோது மாகாணசபை அமைப்பை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்கவில்லை. அதனை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பாக ஏற்று தேர்தலை சந்திக்க முடிவெடுத்தோம். ஆயினும், மாகாணசபையைக் கலைத்து உடன் தேர்தலை நடத்துமாறு நாம்வற்புறுத்தியதுடன் அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத்திருத்தமும் நீக்கப்படவேண்டுமென முன் நிபந்தனை விதித்தோம். ஆனால் அன்று சிங்கள அரசு எமது கோரிக்கைகளை தட்டிக் கழித்து காலம் தாழ்த்தி வந்தது. பேச்சுக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக இழுபட்டு வந்தன. அன்று நல்லெண்ணமும் சமாதானமும் நிலவியபோது, தேர்தலுக்கு சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லையென பிரேமதாசா நொண்டிச்சாக்கு சொல்லிவந்தார். ஆனால்

புறத்தில் இன அழிப்பு நடவடிக்கைகளைத் தீவிரமாக்கிக் கொண்டு, மறுபுறத்தில் மாகாண சபைத் தேர்தல் என்று உலகத்தின் கண்களுக்கு மண் தூவ முனையும் பிரேமதாசாவின் கபட நாடகம் குறித்து சர்வதேச சமூகம் விழிப்பாக இருக்குமென நம்புகிறோம்.

### நிரந்தரத் தீர்வுகாண முடியாது

இன்று எமதுமக்களுக்கு எதிராக ஏவப்பட்டுள்ள யுத்தமும் சிங்கள ஆயுதப் படைகளின் கொடூரமான இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு அப்பட்டமான உண்மையை உணர்த்தியிருக்கிறது. அதாவது சிங்களப் பேரினவாத வல்லாதிக்கத்தை எமது மக்கள் மீது திணிக்க முயலும் ஸ்ரீலங்காவின் ஒற்றை ஆட்சி அரசியலமைப்புத் திட்டத்தின்கீழ் இனப்பிரச்சினைக்கொரு நிரந்தரத் தீர்வுகாண முடியாது என்பதுதான். நாற்பது ஆண்டு கால கசப்பான வரலாற்று அனுபவமும் இந்த உண்மையை எடுத்தியம்புகிறது.

மாகாண சபைத் திட்டமானது ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி யாப்புவின் கட்டமைப்பின்கீழ் அமைகிறது. ஆகவேதான் இத்திட்டத்தைநாம் ஒரு

# சில நாட்களுக்குள் மட்டும் தமிழகத்துக்கு 15,000 அகதிகள்!

(சென்னை)

கடந்த மாதம் 11ஆம் திகதி முதல் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் மூண்ட யுத்தம் காரணமாக இதுவரை சுமார் பதினையாயிரத்து இருநூறு தமிழ் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளதாக தமிழக அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஒன்பது நாட்களில் மட்டும் பதினோராயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் இங்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் ஒரு நாளில் மட்டும் நாலாயிரத்து முந்நூறு பேர்வரை வந்துள்ளனர்.

நேற்றும் பெருமளவு அகதிகள் வந்துள்ளதாகவும் இவர்கள் எத்தனைபேர் என்ற விபரம் தெரியவில்லை என்றும் அந்த அதிகாரி கூறினார்.

மண்டபம், கொட்டப்பட்டு அகதி முகாம்கள் நிரப்பியுள்ளதால் தற்போது வரும் அகதிகளை சேலம், திருநெல்வேலி, மதுரை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் புதிதாக நிறுவப்படும் முகாம்களில் தங்கவைக்கப்படுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கையில் இருந்து தற்போது வரும் அகதிகளை பராமரிப்பதற்காக இரண்டு கோடி ரூபா வழங்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசிடம் கேட்டுள்ளது.

# "பொறுப்புக்களை ஊழியர் தட்டிக்கழிக்க முடியாது"

## யாழ் செயலக ஊழியருக்கு மேலதிக அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்கள் கடமைக்குச் சென்று மக்களுக்கு சேவை ஆற்றவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் வேலைக்குச் செல்லத் தவறும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கைசெய்தார்.

யாழ். செயலக மண்டபத்தில் நேற்று அரசாங்க ஊழியர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய மேலதிக அரசாங்க அதிபர் ஊழியர்களின் பொறுப்

''எங்கள் உயிருக்கு உத்தரவாதம் தருகிறீர்களா? பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது'' என்று பல சாக்குப் போக்குக்களைகூறிக்கொண்டு தமதுபொறுப்புக்களை அரசாங்கஊழியர்கள் தட்டிக்கழிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் திரு. சண்முகநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே இருந்திருந்தாற்போல் ஏதாவது சம்பவங்கள் நடைபெறுகின்றன. வீட்டிலிருந்தால் இவற்றிலிருந்து தப்பி விடலாம் அலுவலகத்தில் இருந்தால் பாதிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுக் கூறிவிட முடியாது.

எனவே ஓய்வூதியக்கிளை, சமூகசேவைகள் பகுதி, கணக்குக்கிளை, உணவுத்திணைக்களம் ஆகியனகட்டாயம்இயங்க வேண்டிய பகுதிகளாகும். இக்கிளைகளில் தூர இடங்களிலிருந்து வந்து பணியாற்றும் பெண் ஊழியர்கள் போக்குவரத்து கஷ்டம் காரணமாக வரமுடியாமல் இருக்கலாம். இவர்களுக்குப் பதிலாக கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து வேறு கிளைகளில் பணியாற்றும் ஊழியர்களை இக்கிளைகளுக்கு மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சண்முகநாதன் தெரிவித்தார். (75)

யாழ். மண்ணையும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி )

யோகி இப்போராட்டத்திற்கு யாழ். மாவட்ட மக்களின் பங்களிப்பு ஏனைய மாவட்ட மக்களின் பங்களிப்புடன் ஒப்பிடும்போது போதாது எனத் தெரிவித்தார். மேலும் கல்வியில் தாம் மேம்பட்டவர்கள் என்று கூறிக்கொள்ளும் இந்த யாழ்ப்பாண மக்களின் கல்வியானது படித்துப் பட்டம் பெற்று பதவி ஒன்றில் அமர்ந்து அரசிற்கோ அல்லது அந்நிய நாடுகளில் வேறு யாருக்கோ விசுவாசமாக உழைக்கும் தன்மையும், போராட்டத்திலிருந்து தப்பி ஓடுவதற்குமே வழி வகுக்கிறது எனவே எமது போராட்டத்துடன் இணைந்துநிற்காத இக்கல்வி முறையானது மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

இன அழிப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவையானது இதுவரை சரிவர பங்கேற்காமையும் சுட்டிக் காட்டினார்.

யாழ் மாவட்ட மகளிர்முன்னணிப்பொறுப்பாளர் மாலினி கூறியதாவது;

ஏற்கனவே வீர மரணமடைந்த போராளிகளின் தியாகங்களை நிறைவேற்றும் வரலாற்று கடைப்பாடு நமக்கு உண்டு. போராட்டத்தில் தாழ்வு மனப்பான்மை, விரக்தி என்பன தோன்றும் இவற்றை நாம் எதிர்த்து செல்ல வேண்டும். மேலும் இன்று தமிழீழத்தில் பெண்களின் விகிதாசாரமே அதிகம். இப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பானது 1983லிருந்து ஆரம்பமானது இன்று மகளிர் அணியானது ஆண் போராளிகளில் தங்கியிராது சுயமாக இயக்க கூடிய இராணுவ அணியாக வளர்ந்துள்ளது. அத்துடன் சமையல் செய்யவும் வீட்டு வேலைகளுக்கும்தான் பெண்கள் பொருத்தமானவர்களெ

ளும் இரு குழந்தைகளும் காணப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கடற் படையால் மக்கள் பீதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடலில் நடைபெறும் கடற்படைப் படகினரின் சோதனைகளாலும், பீரங்கி வேட்டுக்களாலும் அச்சமுற்ற மக்கள், நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணத்தை மேற்கொள்ளப் பயப்படுகின்றனர்.

வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெற்றுவந்த படகுச் சேவைகளை இரு தினங்கள் மாத்திரம் நடாத்த அச்சம் காரணமாக முடிவுசெய்யவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

நெடுந்தீவு மக்களின் அனைத்துத் தேவைகளுக்கும் யாழ். குடாநாட்டுக்குப் போய்வர வேண்டிய அவசியம் உண்டு என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். (62)

## அகதிகளுக்கு மே. ஜெர்மனி உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள அகதிகளுக்கு உதவும் பொருட்டு மேற்கு ஜெர்மனி இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை வழங்கமுன்வந்துள்ளது.

இவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் வடக்கு கிழக்கு பகுதி அகதிகளுக்கு அனுப்பப்படும்.

### உணவு மருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. ஏற்கனவே கொழும்பிலிருந்து மதவாச்சி வரை வந்து நிற்கும் லொறிகளிலிருந்தே இந்த உணவுப் பொருள்களும் மருந்துப் பொருள்களும் மாற்றப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படும் என்று அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இங்கிருந்து செல்லும் பல நோக்கு கூட்டுறவுச் சங்க லொறிகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் பிரயாணம் செய்யும் இரண்டு கார்களும் செல்லவிருக்கின்றன. மேற்படி பிரயாண ஒழுங்குகளைச் செய்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுத் தலைவர் டாக்டர் கொன்ரெஸ்ரா நேற்று மாலை பிரஸ்தாப லொறிச் சாரதிகளுக்கு பிரயாணம் பற்றிய சகல ஏற்பாடுகளையும் விளக்கிக் கூறினார். (75)

மாகாணசபை அமைப்பை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்கவில்லை. அதனை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பாக ஏற்று தேர்தலை சந்திக்க முடிவெடுத்தோம். ஆயினும், மாகாணசபையைக் கலைத்து உடன் தேர்தலை நடத்துமாறு நாம்வற்புறுத்தியதுடன் அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத்திருத்தமும் நீக்கப்படவேண்டுமென முன் நிபந்தனை விதித்தோம். ஆனால் அன்று சிங்கள அரசு எமது கோரிக்கைகளை தட்டிக் கழித்து காலம் தாழ்த்தி வந்தது. பேச்சுக்கள் ஒரு வருடத்திற்கு மேலாக இழுபட்டு வந்தன. அன்று நல்லெண்ணமும் சமாதானமும் நிலவியபோது, தேர்தலுக்கு சூழ்நிலை சாதகமாக இருக்கவில்லையென பிரேமதாசா நொண்டிச்சாக்கு சொல்லிவந்தார். ஆனால் இன்று தமிழீழ மக்களுக்கு எதிராக ஒரு முழு அளவிலான யுத்தத்தை நடத்திக்கொண்டு எமது மக்களைப் பெருவாரியாக அழித்துக்கொண்டு, பொருளாதாரத் தடைவிதித்துப் பஞ்சத்தில் ஆழ்த்திக் கொண்டு, லட்சக் கணக்கானோரை அகதிகளாகமாற்றிக் கொண்டு தேர்தலுக்கு தயாரா என சவால்விடுக்கிறார் பிரேமதாசா. இன்றைய பயங்கரமான சூழ்நிலை தேர்தலுக்குச் சாதகமான சுமூக சூழ்நிலை என பிரேமதாசா கருதுவாரானால் தமிழ்பேசும்மக்களின் நலனில் அவருக்கு எத்தகைய அக்கறை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். ஒரு

### விமானத்திலிருந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நின்றவர்கள் பொதுமக்கள் என்றுகண்டபிறகும் விமானம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் மூவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார்கள். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை வவுனியா நகரில் இடம்பெற்றது. (58)

### விடுதலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் இளைஞர்களின் பெற்றோர், உறவினர்கள் இவ் இடத்துக்கு வந்து அவர்களை அழைத்துச்செல்லுமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுக்கொ[illegible]றார்கள்.

### சார்க்நாடுகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இந்தியாவில் உள்ள அரசியற் கட்சிகள், பிரதமர் வி.பி. சிங், முக்கிய அமைச்சர்கள் ஆகியோரையும் இக்குழு சந்தித்துப் பேசவுள்ளது.

ராக ஏவப்பட்டுள்ள யுத்தமும் சிங்கள ஆயுதப் படைகளின் கொடூரமான இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு அப்பட்டமான உண்மையை உணர்த்தியிருக்கிறது. அதாவது சிங்களப் பேரினவாத வல்லாதிக்கத்தை எமது மக்கள் மீது திணிக்க முயலும் ஸ்ரீலங்காவின் ஒற்றை ஆட்சி அரசியலமைப்புத் திட்டத்தின்கீழ் இனப்பிரச்சினைக்கொரு நிரந்தரத் தீர்வுகாண முடியாது என்பதுதான். நாற்பது ஆண்டு கால கசப்பான வரலாற்று அனுபவமும் இந்த உண்மையை எடுத்தியம்புகிறது.

மாகாண சபைத் திட்டமானது ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி யாப்புவின் கட்டமைப்பின்கீழ் அமைகிறது. ஆகவேதான் இத்திட்டத்தைநாம் ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்கமறுத்தோம். இன்று புதிதாகப் பிறந்துள்ள பாரதூரமான சூழ்நிலை காரணமாக மாகாணசபைத் திட்டத்தை நாம் ஒரு தற்காலிக தீர்வாகவும் ஏற்கத் தயாராக இல்லை. தமிழீழ மக்களை ஏமாற்றி, தனது வல்லாதிக்கத்தின் கீழ் அடக்கி வைத்திருக்கும் நோக்குடன், சிங்கள அரசு முன்வைக்கும் அரசியல் பொறிகளுக்குள் நாம் ஒருபொழுதும் சிக்கிவிடப்போவதில்லை.

பிரேமதாசா அரசு தமிழீழ மக்களுக்கு நீதி வழங்க விரும்பினால் சிங்களப் பேரினவாதத்தின் சின்னமாக விளங்கும் ஒற்றையாட்சி யாப்பினை முற்றாக மாற்றியமைக்க முன்வரவேண்டும். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, பூரண அரசியல் அதிகாரங்களுடைய மாநில சுயாட்சித் திட்டம் ஒன்றை சிங்கள அரசு முன்வைக்குமானால் எமது இயக்கம் அதனைப் பரிசீலனை செய்யத்தயாராகஇருக்கிறது. ஆனால், அதேவேளை எமது மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதமும், இனஒழிப்பு நடவடிக்கைகளும் தொடருமானால் தமிழீழத் தனியரசை அமைக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை.

### அகதிகளுக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள் பால் மா, ஊட்டச்சத்துணவு, பிஸ்கற் வகைகள், உடைகள் என்பன அனுப்பப்படவுள்ளன.

மாணவர்கள் மிக ஆர்வமாக உணவுப்பொருட்களை வழங்கிவருவதையும் இதுவரை ஒரு லொறிக்கு மேற்பட்ட உணவுப் பொருட்களும், உடைகளும் சேர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தட்டிக்கழிக்க முடியாது

## யாழ் செயலக ஊழியருக்கு மேலதிக அரச அதிபர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்கள் கடமைக்குச் சென்று மக்களுக்கு சேவை ஆற்றவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் வேலைக்குச் செல்லத் தவறும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கைசெய்தார்.

யாழ். செயலக மண்டபத்தில் நேற்று அரசாங்க ஊழியர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய மேலதிக அரசாங்க அதிபர் ஊழியர்களின் பொறுப்புக்களையும் கடமைகளையும் விவரித்தார். தூர இடங்களில் இருப்போருக்கு போக்குவரத்துக் கஷ்டங்கள் ஏற்பட்டாலும் அண்மையில் கோப்பாய், யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிப்பவர்களுக்கு வேலைக்கு வராமல் இருக்க எதுவித காரணமும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

''எங்கள் உயிருக்கு உத்தரவாதம் தருகிறீர்களா? பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது'' என்று பல சாக்குப் போக்குக்களைகூறிக்கொண்டு தமதுபொறுப்புக்களை அரசாங்கஊழியர்கள் தட்டிக்கழிப்பதை அனுமதிக்க முடியாது என்றும் திரு. சண்முகநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே இருந்திருந்தாற்போல் ஏதாவது சம்பவங்கள் நடைபெறுகின்றன. வீட்டிலிருந்தால் இவற்றிலிருந்து தப்பி விடலாம் அலுவலகத்தில் இருந்தால் பாதிப்பு ஏற்படும் என்று குறிப்பிட்டுக் கூறிவிட முடியாது.

எனவே ஓய்வூதியக்கிளை, சமூகசேவைகள் பகுதி, கணக்குக்கிளை, உணவுத்திணைக்களம் ஆகியனகட்டாயம்இயங்க வேண்டிய பகுதிகளாகும். இக்கிளைகளில் தூர இடங்களிலிருந்து வந்து பணியாற்றும் பெண் ஊழியர்கள் போக்குவரத்து கஷ்டம் காரணமாக வரமுடியாமல் இருக்கலாம். இவர்களுக்குப் பதிலாக கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்து வேறு கிளைகளில் பணியாற்றும் ஊழியர்களை இக்கிளைகளுக்கு மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. சண்முகநாதன் தெரிவித்தார். (75)

### விடுதலைப் புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரை படையினர் பிடித்தால் ஏனையவர்களை வரிசை வரிசையாகப் பிடிக்கலாம் எனவும் ஆனால் விடுதலை புலிகளைப் பொறுத்து அவ்வாறு இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

### இராணுவத்தால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருத்தி அகதிகள் புனர்வாழ்வு கழக தலைவர் திரு. எஸ். சிவராஜலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் ஆய்வுப் பட்டறை வட்டக்கச்சி அரசினர் விவசாய பண்ணையில் விரிவுரையாளர் திரு. எஸ். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது திரு. சிவராஜலிங்கம் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

நாம் முயற்சியில் ஈடுபடும்போது ஒரு இலக்கை அடைய பல தடைகள் ஏற்படும். அவற்றை எதிர்த்துப் போராடுவதன் மூலம் தான் எமது இலக்கை அடைய முடியும்

உளரீதியாகவும் செயல் ரீதியாகவும் நாம் நல்ல சிந்தனையுடன் செயல்பட வேண்டும். அப்போதுதான் நாம் எடுத்துக் கொண்ட காரியத்தில் வெற்றியடைய முடியும் என்றார். (49)

## கேரதீவு - சங்குப்பிட்டி பாதைச்சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிக்குப் போகும் வழியில் அமைந்துள்ள கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதைச்சேவை நேற்றுக்காலை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. மேற்படி பாதைச் சேவையை நிறுத்தும்படி ஹெலியிலிருந்து போடப்பட்டதுண்டுப் பிரசுரங்களைத் தொடர்ந்தே கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதைச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாம். இதனால் கேரதீவு இறங்குதுறை வழியாக பூநகரி, மன்னார் செல்லும் பிரயாணிகள் நேற்றுக் காலை கேரதீவுஇறங்கு துறை வரை சென்று ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர்.

கொழும்பு, முல்லைத்தீவு, பரந்தன் செல்லும் பிரயாணிகளும் இவ் வழியாகவே சமீப காலங்களில் பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாவது

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தம் என்பதற்குப் பதிலாக ''இரண்டாவது ஈழ யுத்தம்'' என்றே அது வெளிவந்திருக்க வேண்டும்.

### இலங்கையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான மக்கள் திடீரெனக்காணாமல் போவது சகஜமாகியுள்ளது எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1980 முதல் தமிழ் போராளிகளை அடக்குவதற்கு அரச படைகள் மிகமோசமாக மக்களை துன்புறுத்தியதாகவும் 1989 இல் பலர் காணாமல் போயுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முருங்கன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைகளும் கொள்ளையிடப்பட்டன.

இதேபோல சிறுக்கண்டல் கிராமத்தில் ஐந்து வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டன. மிகுதியான வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன.

உயிலங்குளம் 9ஆம் கட்டையில் லொறி ஒன்றும், பசீர் என்பவரின் நெல் வியாபார நிலையமும் எரிக்கப்பட்டன.

யாழ் மாவட்ட மகளிர்முன்னணிப்பொறுப்பாளர் மாலினி கூறியதாவது;

ஏற்கனவே வீர மரணமடைந்த போராளிகளின் தியாகங்களை நிறைவேற்றும் வரலாற்று கடைப்பாடு நமக்கு உண்டு. போராட்டத்தில் தாழ்வு மனப்பான்மை, விரக்தி என்பன தோன்றும் இவற்றை நாம் எதிர்த்து செல்ல வேண்டும். மேலும் இன்று தமிழீழத்தில் பெண்களின் விகிதாசாரமே அதிகம். இப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பானது 1983லிருந்து ஆரம்பமானது இன்று மகளிர் அணியானது ஆண் போராளிகளில் தங்கியிராது சுயமாக இயக்க கூடிய இராணுவ அணியாக வளர்ந்துள்ளது. அத்துடன் சமையல் செய்யவும் வீட்டு வேலைகளுக்கும்தான் பெண்கள் பொருத்தமானவர்களென்றநிலை இன்றுமாறி, பெண்களின் பங்களிப்பானது எமது போராட்டத்திற்கு அதிகரித்துக்கொண்டு வருகின்றது.

### வற்றாப்பளை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிப்பிரயோகமும், ஷெல் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

வற்றாப்பளை, மூன்றாம் கட்டை, ஆகியபகுதிகள் பிரதானமாக தாக்குதலுக்கு உள்ளான பகுதிகளாகும் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை.

## ஒளிபரப்பாளருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

சகல தனியார் ஒளிபரப்பு நிலைய உரிமையாளர்களும் இம்மாதம்பதினைந்தாம்திகதி ஞாயிறு காலை 9.00 மணிக்கு யாழ். திருநெல்வேலி கிழக்கு இராமநாதன் வீதி 234ஆம் இலக்கத்தில் உள்ள நிதர்சனம் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.


## கோணாமலையைச் சேர்ந்த செல்வதாசைத் தேடுகின்றனர்

16.06.90 சனிக்கிழமை இரவு காலமான உனது அருமைத்தாயாரின் அந்தியேட்டி இம்மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் இடம்பெற இருப்பதால் ஒரே ஒரு மகனான நீ தயவுசெய்து எங்கிருந்தாலும் உன் தாய்க்கு அரிசி முதலான தானங்களைக் கொடுத்து விட்டுப் போகவும்.

நீ சென்ற இடம் தெரியாமல் அலைகிறோம்.

உனது வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்

(R/513) ஆச்சி, பப்பா, மாமா, சின்னக்கா, மாமி



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது